## தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை – 2015

தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டில் செயற்பாட்டு அலுவல்கள் தொடர்பாக கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகர சபை சட்டத்தின் 20(2) ஆம் பிரிவு உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகார சட்டத்தின் பிரிவு 13(6) இன் பிரகாரம் சமர்பிக்கபட வேண்டிய 2015 ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் இந்த அறிக்கைத் திகதி வரை சமர்ப்பித்திருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியது என கருதும் மீளாய்வாண்டிற்கான அதிகார சபையின் செயற்பாடுகள் தொடர்பாக எனது அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் அடங்கியுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிற கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுபாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 2 நிதிக் கூற்றுக்கள்

### 2.1 நிதிக் கூற்றுகள் சமர்பித்தல்

2003 ஜுன் 02 ஆம் திகதி பிஈடீ/12 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவின் பிரகாரம் கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைபு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட வேண்டுமெனினும் 2015 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இவ்வறிக்கை திகதிவரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பித்திருக்கவில்லை.

### 2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் நிலைத்திருத்தல்

அதிகார சபினால் இறுதியாக தயாரித்திருந்த 2014 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் ,பொறுப்புகள் மற்றும் வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பாக விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| நிதிக் கூற்று விடயம் | பெறுமதி |
|---|---|
| சொத்துக்கள் | ரூபா |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 16,752,897 |
| நடைமுறை சொத்துக்கள் | 2,492,381 |
| மொத்த சொத்துக்கள் | 19,245,278 |

| | |
|---|---|
| உரிமை மூலதனம் மற்றும் சொத்து பொறுப்புகள் | |
| உரிமை மூலதனம் | 3,705,071 |
| பொறுப்புகள் | |
| நடைமுறை அல்லாத சொத்துகள் | 13.840,972 |
| நடைமுறை பொறுப்புகள் | 1,699.235 |
| மொத்த பொறுப்புகள் | 19,245,278 |
| மொத்த வருமானம் | 30,592,712 |
| மொத்த செலவுகள் | 27,064,820 |
| மிகை | 3,527,892 |

**2.3 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 110 | சேதங்கள் தொடர்பாக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 115 (ஆ) | மதிப்பீடுகளில் பண ஏற்பாடுகளின் மூலம் முன்னைய கொடுப்பனவுகள் தொடர்பாக போதிய அதிகாரமுடைய உத்தியோகத்தர் ஒருவரின் சான்றிதழ் ஒன்றின் மூலம் கொடுப்பனவு செய்ய முடியுமெனினும் ரூபா 197,106 தொகைக்கான முன்னைய கொடுப்பனவுகளுக்கு அவ்வாறான அதிகாரம் ஒன்று பெற்றிருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 257 | சான்றுபடுத்தப்பட்ட உறுதிச் சான்றுகளை மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமென குறிப்பிட்டிருந்த போதிலும் ரூபா 197,106 தொகைக்கான செய்தித்தாள் அறிவித்தல் கட்டணம் கொடுப்பனவிற்கு உரிய உறுதி சீட்டு சான்று படுத்தியிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iv) | நிதிப் பிரமாணம் 371 மற்றும் 2015 ஜுலை 14 திகதி 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கியிருந்த முற்பணம் ஒன்று வழங்கப்பட்ட கருமம் முடிவடைந்தவுடன் தீர்கப்பட வேண்டும் எனினும் 2015 ஆண்டின் போது 30 சந்தர்பங்களில் வழங்கியிருந்த ரூபா 1,173,164 தொகைக்கான முற்பணங்கள் தீர்த்திருக்கவில்லை. |
| (v) | நிதிப் பிரமணம் 756 | அதிகார சபையின் பண்டங்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் தொடர்பாக மீளாய்வாண்டிற்கான கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2003 ஜுன் 24 திகதிய 112 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை | இரண்டு வாகனங்கள் கொல்வனவு செய்வதற்காக தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

2006 இன் 17 ஆம் இலக்க தேசிய பொது முயற்சிகள் அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் குறிக்கோள்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) இலங்கையில் சிறிய மத்திய அளவிலான தொழில் முயற்சிகளின் அபிவிருத்தியை ஊக்குவித்தல், முன்னேற்றுதல் மற்றும் வசதிகளை வழங்குவன் மூலம் இலங்கை பொருளாதாரத்தின் அபிவிருத்தியை விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக ஊக்குவித்தல்.

(ஆ) இந் சட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றி கொள்வதற்காக வெறிநாட்டு சந்தைகளை வெற்றி கொள்ளக்கூடிய தேசிய தொழில் முயற்சி சர்வதேச மயப்படுத்தும் குறிக்கோளுடன் தொழில் முயற்சிகள் இலங்கைக்கு வெளியே நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதல், ஊக்குவிப்பை ஏற்படுத்துவதற்காக ஊக்குவித்தல்.

(இ) பொருத்தமான முறையில் தயாரிக்கப்பட்ட கொள்கைகள் ,திட்டங்கள், உயர்த்துவற்கான ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் தயாரித்தல் மற்றும் கைத் தொழில் மற்றும் விவசாய வர்த்தகம் மற்றும் அபிவிருத்திக்காக உயிர்புடன் உதவுதல் மற்றும் அவற்றை அபிவிருத்தி செய்தல்.

(ஈ) தொழில் முயற்சி அபிவிருத்தியில் கட்டாயமான ஆக்கக் கூறுகள் என தொழில் நுட்பம் சார் திறன்களுடன் மனித மூலதன அபிவிருத்தியை பொது மக்களிடம் ஏற்படுத்துதல்.

(உ) அபிவிருத்தி தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்தல்.

(ஊ) தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் செயற்படுத்துவதற்காக தேவையான நிதியை பெற்றுக் கொள்வதற்காக தொழில் முயற்சியாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்துதல்.

(எ) தொழில்நுட்பம் சார் முன்னேற்றம் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் பேன்ட் உரிமையினை வாணிப மயப்படுத்துவதற்கான ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி மேம்படுத்துவற்காக தொழில்நுட்ப நிதியம் ஒன்று நிறுவுதல் .

(ஏ) பிராந்திய பொருளாதார அபிவிருத்திக்காக வசதிகளை ஏற்படுத்துதல்.

3.2 மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கபட்டு செயற்படுத்துவதற்காக திட்டமிட்டிருந்த கருமங்களின் முன்னேற்றம் பின்வருமாறு ஆகும்.

(அ) மாவட்ட மற்றும் பிராந்திய மட்டத்தில் சிறு அளவிலான தொழில் முயற்சியாளர்கள், வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் ஆகியோரை அறிமுகப்படுத்தி வியாபார நடவடிக்கைகளின் போது எதிர்கொள்ள நேரிடும் சிக்கல்களை தீர்ப்பதற்காக வழிகாட்டுவதற்காக ரூபா 1,200,000 தொகை செலவிடப்பட்டு நாட்டின் அனைத்து மாவட்ட செயலகங்களும் அடங்கும் விதமாக பிராந்திய வியாபாரி ஒன்றியங்களை நடாத்துதல் எதிர்பர்த்த போதிலும் பிராந்திய வியாபார ஒன்றியங்கள் 77 மாத்திரம் நிறுவப்பட்டிருந்ததுடன் அது எதிர்பார்த்த குறிக்கோளில் 30 சதவீதமாகும்.

(ஆ) அரச மற்றும் தனியார் மட்டத்திலுள்ள தொழில் முயற்சியாளர்கள் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்கள் நிதி மற்றும் ஏனைய சேவைகள் வழங்குனர்கள், முதலீட்டாளர்கள், பல்வேறு அக்கரை காட்டும் தரப்பினர் ஆகிய பல குழுக்களை ஒன்று திரட்டி தேசிய மட்டத்தில் வர்த்தக கலந்துரையாடல்கள் நடாத்துவதன் முலம் அந்த தரப்பினர் இடையே இணைய மயப்படுத்தல் ஏற்படுத்தும் குறிக்கோளுடன் ரூபா 200,000 இற்கான நிகழ்ச்சி திட்டம் ஒன்று செயல்நடவடிக்கை திட்டத்தில் அடங்கியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது கலந்துரையாடல் ஏதும் நடைபெற்றிருக்கவில்லை.

(இ) அதிகார சபையினால் சிறு மற்றும் மத்திய அளவினதாக வர்த்தகங்களுக்கான சிக்கல்களை தீர்ப்பதை குறிக்கோளாக கொண்டு மீளாய்வாண்டின் போது ஆசிய மன்றத்துடன் இணைந்து "Issue Tracker" மென்பெருள் நிறுவியிருந்த போதிலும் வருட இறுதி அளவில் ரூபா 48,000 தொகை செலவிடப்பட்டு 3 மாவட்டங்களில் மாத்திரம் முன்னோடி நிகழ்ச்சி திட்டங்கள் செயற்படுத்தியிருந்த போதிலும் பௌதீக முன்னேற்றம் 40 சதவீதம் மாத்திரமாகும்.

(ஈ) தொழில் முயற்சியாளர்களுக்காக தொழில்நுட்பம் நிதி நுழைவுகள், வர்த்தக சட்டங்கள் ஆகிய பரப்புகளுக்காக தொழில் முயற்சிகளின் அறிவினை வழங்குவதற்காக ஆண்டின் போது "திரியட சவிய" தொலைக் காட்சி நிகழ்ச்சி திட்டமொன்று ஒரு மாத்திற்கு 1 வீதம் 12 நிகழ்ச்சி திட்டங்கள் நடாத்துவதற்கு செயல் நடவடிக்கை திட்டத்தில் உட்படுத்தியிருந்த போதிலும் 7 நிகழ்ச்சி திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 2,352,180 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சி திட்டத்தின் மூலம் குறிப்பிட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என பின் தொடர் செயல் நடவடிக்கை அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டது என அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சிறு மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சியாளர் மற்றும் வர்த்தக அபிவிருத்தி சேவை வழங்குனர்களுக்காக தகவல்கள் வழங்கும் குறிக்கோளுடன் 3 செய்தித்தாள் மீளாய்வாண்டின் போது வெளியிடுவதற்கான திட்டமிட்டிருந்த போதிலும் ஒரு செய்தித்தாள் மாத்திரம் வெளியிடப்பட்டிருந்தது.

(ஊ) யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்த விதவைகளை வெற்றிகரமான தொழில் முயற்சியாளர்கள் ஆக்கி அவர்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்யும் குறிக்கோளுடன் நூறு விதவைகளை தெரிவு செய்து அவர்களுக்கு வழிகாட்டுவதற்காக செயற்படுத்துவற்காக திட்டமிட்டிருந்த நிகழ்ச்சி திட்டத்தின் மூலம் மீளாய்வாண்டின் போது பெற்றிருந்த முன்னேற்றம் 30 சதவீதம் மாத்திரமே.

(எ) குருநாகல் , கண்டி ,மன்னார் மற்றும் மட்டக்களப்பு ஆகிய 4 மாவட்டங்களை அடிப்படையாக கொண்டு மாவட்ட நிதியாக செயற்படுத்திய போட்டி அடிப்படையில் வியாபார திட்டங்கள் மற்றும் சிக்கல்கள் இனங்காணும் நிகழ்ச்சி திட்டம் மீளாய்வாண்டின் போது இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 603,459 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஏ) பிராந்திய வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்கள் மற்றும் சிறு அளவிலான தொழில் முயற்சியாலர்கள் சிறு அளவிலான வியாபாரங்கள் தொடர்பாக விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் மற்றும் தேவையான மூலவளங்களை எழிதில் பெறுவதற்கு வசதி செய்யும் குறிக்கோளுடன் மாவட்ட மட்டத்தில் சிறு அளவினை வியாபாரங்கள் தொடர்பாக தரவு முறைமையொன்று வடிவமைப்பதற்காக 2015 ஆண்டின் போது செயற்படுத்தப்பட்ட செயற்திட்டம் வருட இறுதி அளவில் பூர்த்தி செய்திருக்காததுடன் அதனது பௌதீக முன்னேற்றம் 30 சதவீத மாத்திரமாகும்.

(ஐ) தொழில் நுட்ப அபிவிருத்தி நிதியம் ஒன்று நிறுவுவதன் முலம் ஆண்டின் போது Hand operated milking machine, Aricunut sheath cups, Tender Coco, De husking machine மற்றும் Banana Fiber and thread ஆகிய இயந்திரங்களை அறிமுகப்படுத்துதல், நிகழ்ச்சி திட்டத்தில் அடங்கியிருந்த போதிலும் ரூபா 334,142 தொகை செலவிடப்பட்டு Hand operated milking machine ஒன்று மாத்திரம் அறிமுகப்படுத்தியிருந்ததுடன் அந்த நிகழ்ச்சி திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 30 சதவீதமாகும்.

(ஒ) மீளாய்வாண்டின் போது “Technology Transfer Program” 2 நிகழ்ச்சி திட்டங்கள் செயற்படுத்துவதற்காக செயல் நடவடிக்கை திட்டத்தில் உட்படுத்தியிருந்த போதிலும் நிகழ்ச்சி திட்டம் ஏதும் செயற்படுத்தியிருக்காததுடன் அதனை அடுத்த வருடத்திற்காக பிற்போடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த நிகழ்ச்சி திட்டத்திற்காக ரூபா 26,424 தொகை ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

(ஓ) 2015 ஆண்டின் போது சிறு மற்றும் மத்திய அளவி தொழில் முயற்சி சார் அபிவிருத்திக்கக சர்வதேச மட்டத்தில் கருத்தரங்கு ஒன்று நடாத்துதல் செயல் நடவடிக்கை திட்டத்தில் அடங்கியிருந்த போதிலும் அந்த நிகழ்ச்சி திட்டம் இரத்து செய்யப்பட்டிருந்தது.

**3.3 பதவியணி நிருவாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) 2015 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை 32 பேராக இருந்ததுடன் உள்ளவாறான பதவியணியினர் 22 ஆக காணப்பட்டமை 10 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 2017 ஆண்டின் போது அவ்வெற்றிடங்களில் 02 மாத்திரம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) அதிகார சபையின் சாரதி ஒருவர் கைத்தொழில் மற்றும் வாணிப் அலுவல்கள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 2015 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை அவருக்கு சம்பளம் மற்றும் பிரயாணச் செலவு ஆக ரூபா 225,035 தொகையும் அதிகார சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) அதிகார சபை ஆக்கப்பட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றிக் கொள்வதற்கு தொழில் முயற்சிகள் மேம்பாட்டு உதவியாளர் பதவிகள் நேரடியாக பாதிப்பதன் காரணத்தினால் அந்த அங்கீகரிக்கப்பட்ட 8 பதவிகளும் வெற்றிடமாக காணப்படுதல் அதிகார சபையின் குறிக்கோள்கள் நிறைவேற்றுவதற்கு பிரதிகூலமாக தாக்கக் கூடியதாகவுள்ளது.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு குறைபாடுகளை அவ்வப்போது அதிகார சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது கீழ்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு பரப்புகள் | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணல் | (i) சேதங்கள் தொடர்பாக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.<br>(ii) கணக்காய்வு ஐய வினா பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) முற்பணம் | முற்பணம் தீர்ப்பதில் தாமதம் |